**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 34/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Moorthy |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15th day of July, 2025.

**(A1 to A5, A7 are present, A6 died, Charge abated against him)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**குறுக்கு விசாரணை** :

நான் தற்போது அருங்குளம் காலனியில் வசித்து வருகிறேன். நான் எஸ்.சி. ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. புகாரில் உள்ள என்னுடைய கையொப்பம் **அ.த.சா.ஆ.1**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 கைப்பற்றுதல் மகஜர்களிலும் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் என் மகன் பாலமுருகன் மற்றும் எங்கள் காலனியை சேர்ந்த கலையரசன், அமாவாசை ஆகிய மூவரும் மண்ணூரில் உள்ள DAS கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும் கடந்த 03/01/2015 ஆம் தேதி வழக்கம்போல் வேலைக்கு பேருந்தில் சென்று மறுநாள் வீட்டிற்கு வந்தபோது இரத்த காயத்தேடு வந்ததாகவும், நான் என் மகன் பாலமுருகனை விசாரித்தபோது அதே கம்பெனியில் வேலைசெய்யும் பெருங்களத்தூரை சேர்ந்த வன்னிய இனத்தவர்கள், ஆஜர் எதிரிகள் கிரி, அப்பு, கோபி, வினோத், பிரகாஷ், விஜய் மற்றும் இளங்கோவன் ஆகியோருடன் சேர்ந்து எங்கள் மூவரையும் கழுத்தில் அம்பேத்கர் படம் போட்ட டாலர் போட்டிருந்ததால் டாலரை கழட்டும்படி கூறி சொன்னதாகவும், அதற்கு பாலமுருகன், அமாவாசை, கலையரசன் மறுத்ததாகவும், அவர்கள் தகராறு செய்து மறுத்ததாகவும், என் மகன் என்னிடம் கூறியதாகவும் அதற்கு நாங்கள் பிரச்சனை வேண்டாம் பெரியோர் முன்னிலையில் பேசிக்கொள்ளலாம் என்று கூறியதாகவும், மறுபடியும் 05/01/2015ஆம் தேதி அன்று பெருங்களத்தூரை சேர்ந்த சிலர் கும்பலாக வந்து கத்தி, இரும்பு ராடு, உருட்டுகட்டையுடன் மோட்டார் சைக்கிளில் வந்து காலனிக்குள் புகுந்து ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக திட்டியதாகவும், கண்ணில் தென்பட்டவர்கள் அனைவரையும் அடித்ததாகவும், பொதுமக்கள் ஓடி போய் பிடித்ததாகவும், எதிரிகள் பயன்படுத்திய 5 மோட்டார் சைக்கிள்கள் பிடித்துவைத்தாகவும், அதில் எதிரிகள் கிரி, வினோத்குமார்,

இளங்கோவன் 3 பேரையும் பிடித்து கனகம்மாசத்திரம் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும், அதே நாள் 3 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த வடிவேல் முன்னிலையில் திருத்தணி டிஎஸ்பி சம்பவத்திற்கு எதிரிகள் பயன்படுத்திய ஒரு இரும்பு பைப், ஒரு சவுக்கு கட்டை ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றியதாகவும், அதே நாள் மாலை 4.30 மணியளவில் சம்பவதிற்கு எதிரிகள் பயன்படுத்திய 5 மோட்டார் சைக்கிளை திருத்தணி டிஎஸ்பி மகஜரில் கைப்பற்றியதாகவும், அந்த 2 மகஜர்களில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த வடிவேல் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், தற்போது எதிரிகளுக்கு காப்பாற்ற வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.